பூபாளம்

காப்பு

# அபிராமி அந்தாதி



தார் அமர் கொன்றையும். சண்பக மாலையும் சாத்தும். தில்லை
ஊரர்தம் பாகத்து உமை மைந்தனே. உலகேழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி. எப்போதும் என் சிந்தையுள்ளே
கார் அமர் மேனிக் கணபதியே. நிற்கக் கட்டுரையே.

① உதிக்கின்ற செங்கதிர். உச்சித் திலகம். உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம். மாதுளம் போது. மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி. மென் கடிக் குங்குமத் தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

② துணையும் தொழும் தெய்வமும். பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதி கொண்ட வேரும், பனி மலர்ப் பூங்
கணையும் கருப்புச் சிலையும் மென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுரசுந்தரி ஆவது அறிந்தனமே.

③ அறிந்தேன் எவரும் அறியா மறையை. அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே. வெருவிப்
பிறிந்தேன் நின் நின்பா பெருமை எண்ணாத கரும நெஞ்சால்
மறிந்தே விழு நரகுக்கு உறவாய மனிதரையே.

மாலையாக அமைந்த கொன்றையையும். சண்பக மலர் மாலையையும் முறையே அணிந்த தில்லைப் பதியில் உள்ள பிரானாகிய நடராஜருக்கும். அவர்தம் பாகத்தில் எழுந்தருளிய உமா தேவிக்கும் உரிய மைந்தனே. (கார் அமர் மேனிக் கணபதியே) மேகம் போன்ற கரிய திருமேனியை உடைய கணபதியே, (உலகேழும் ... சிந்தையுள்ளே நிற்கக் கட்டுரையே) உலகங்கள் ஏழையும் பெற்ற சிறப்புடைய அபிராமியன்னைக்கு அணியும் அந்தாதி எப்போதும் என் உள்ளத்துள்ளே நிற்கும்படியாக உரைத்தருள்வாயாக.

எழுகின்ற செஞ்சூரியன். உச்சியிலே மங்கையர் வைத்துக்கொள்ளும் குங்குமத் திலகம். அறிவுடையவர்கள் மதிப்பிடுகின்ற மாணிக்கம். மாதுளம் பூ. தாமரை மலரில் உள்ள திருமகள் துதி செய்கின்ற மின்னல் கொடி. மெல்லிய நறுமணமுடைய குங்குமக் கலவை நீர் என்று அன்பர்கள் உவமையாக எடுத்துச் சொல்கின்ற திருமேனியை உடைய அபிராமியம்மை எனக்கு மேலான துணையானவள்.

எமக்கு உயிர்த்துணையும். யாம் தொழும் தெய்வமும். எம்மைப் பெற்ற அன்னையும், வேதமென்னும் மரத்தின் கிளைகளும் (சாகைகள்). முடிவில் உள்ள கொழுந்தும் (வேதாந்தமாகிய உபநிஷத்துகள்) கீழே பதிந்த வேரும் (பிரணவமும்) குளிர்ச்சியையுடைய மலரம்புகளையும். கரும்பு வில்லையும். மெல்லிய பாசாங்குசத்தையும் திருக்கரத்தில் ஏந்திய திரிபுரசுந்தரியே ஆகும் உண்மையை யாம் அறிந்தோம்.

(திருவே) திருமகளாக இருக்கும் அன்னையே! வேறு யாரும் அறிய இயலாத (மறையை) இரகசியத்தை அடியேன் அறிந்தேன்; அங்ஙனம் அறிந்து கொண்டு நின் திருவடி தன்னுக்கே (செறிந்தேன்) நெருங்கிப் பொருந்தினேன்; நின்னுடைய அடியார்களின் பெருமையை எண்ணாத பாவம் மிக்க மனம் காரணமாகக் (மறிந்தே விழு) குப்புற விழும் நரக லோகத்தின் தொடர்புடைய மனிதர்களை (வெருவிப் பிறிந்தேன்) அஞ்சி விலகினேன்.

(4) மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே. கொன்றை வார் சடை மேல்
பனிதரும் திங்களும் பாம்பும். பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே

(5) பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார் சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை. அம்புய மேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே.

<u>பிலஹரி</u>

(6) சென்னியது உன் பொற் திருவடித் தாமரை. சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம். சிந்துர வண்ணப் பெண்ணே.
முன்னிய நின் அடியாருடன் கூடி. முறை முறையே
பன்னியது என்றும் உன்றன் பரம ஆகம பத்ததியே

(7) ததி உறும் மத்தின் சுழலும் என் ஆவி தளர்வு இலதோர்
கதி உறு வண்ணம் கருது கண்டாய். கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும், வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய், சிந்துரானன சுந்தரியே.

(8) சுந்தரி. எந்தைதுணைவி. என் பாசத் தொடரை எல்லாம்
வந்து அரி. சிந்துர வண்ணத்தினள். மகிடன் தலை மேல்

(2)

மனிதர்களும் தேவர்களும். இறவாத முனிவர்களும் அணுகி வந்து. தம் தலையை வணங்கி
வழிபடும் செம்மையான திருவடிகளையுடைய. அகமும் புறமும் மென்மையான அம்மையே.
கொன்றை மலரை அணிந்த நீண்ட சடையின் மேல். பனியை உண்டாக்கும் சந்திரனையு
பாம்பையும். கங்கையையும் வைத்த தூயவராகிய சிவபெருமானும் நீயும் என் உள
ளத்தே வந்து எந்த நாளிலும் இணைந்து எழுந்தருள்வீர்களாக-

சேர்ந்து பொருந்திய திரிபுரத்தின் தலைவி. செப்பை உவமையாகச் சொல்லும் இரண்
தனங்களின் பாரத்தால் வருந்திய வஞ்சிக்கொடியைப் போன்ற இடையையுடைய
மனோன்மணி.(மனத்தை ஞான நிலைக்கு எழுப்புபவள்). நீண்ட சடையையுடைய சிவ
பெருமான் அருந்திய ஆலகால நஞ்சை (தன் கையால் கழுத்தளவில் நிற்கச் செய்து)
அமுதம் போல் ஆக்கிய தாய், தாமரையின் மேல் அழகு பெற வீற்றிருந்தருளும் பேரழகி
(அந்தரி) பராகாச வடிவினள்- ஆகிய அபிராமியின் திருவடி என் தலையின் மேல் உள்ளது

(சிந்துர...) சிந்துரத்தின் செவ்வண்ணத் திருமேனி படைத்த இளம் உருவத்தில் எழுந்தருளியிருக்கும்
தாயே. அடியேனுடைய தலையின் மேல் இருப்பது உன்னுடைய பொலிவு பெற்ற அழகிய
பாதமாகிய தாமரை மலர்; மனத்தில் என்றும் நிலையாக இருப்பது உன்னுடைய தெய்வத்
தன்மை பொருந்திய மந்திரம்; உன்னையே தியானித்து வாழும் அடியார்களுடன் என்று
முறையாகப் பாராயணம் செய்பவை உன்னுடைய மேலான ஆகம பத்ததிகளாகும்.

தயிரில் நின்று சுழலும் மத்தைப் போலப் பிறப்பு இறப்புக்களினிடையே சுழலும் எ
உயிர், தளர்ச்சியில்லாததாகிய நற் நல்ல நிலையை அடையும் வண்ணம் திருவுள்ள
கொண்டருள வேண்டும்; தாமரையை இருக்கையாகக் கொண்ட பிரமனும், சந்திர
வைத்த சடாபாரத்தையுடைய நின் கணவனாகிய சிவனும், திருமாலும் வணங்கி எ
போதும் துதிசெய்கின்ற செம்மையான திருவடிகளை உடையவளே. செவ்வண்ணத்
திலகம் அணிந்த நெற்றியுள்ள பேரழகியே. (ஆனனம்: முகம்: இங்கே நெற்றி)

அழகி. எம் தந்தையாகிய சிவபிரானுக்குரிய வாழ்க்கைத் துணைவி. என் பாசமாகிய விலங்கை
யெல்லாம் என்பால் கருணையினால் எழுந்தருளி வந்து அழிக்கும் சிந்தூரம் போன்ற செவ்

அந்தரி. நீலி. அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கம் தாரி கைத்தலத்தாள். மலர்த்தாள் என் கருத்தனவே-

(9) கருத்தன. எந்தை தன் கண்ணன வண்ணக் கனக வெற்பிற்
பெருத்தன. பால், அழும் பிள்ளைக்கு நல்கின. பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்து என் முன் நிற்கவே-

(10) நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை,
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள், எழுதா மறையின்
ஒன்றும் அரும் பொருளே, அருளே. உமையே, இமயத்து
அன்றும் பிறந்தவளே. அழியா முத்தி ஆனந்தமே.

## சாவேரி

(11) ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வான் அந்தம் ஆன வடிவுடையாள், மறை நான்கினுக்கும்
தான் அந்தம் ஆன சரணாரவிந்தம், தவள நிறக்
கானம் தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே.

(12) கண்ணியது உன் புகழ்; கற்பது உன் நாமம்; கசிந்து பத்தி
பண்ணியது உன் இரு பாதாம் புயத்தில், பகல் இரவா





மேனி உடையவள், மகிடாசுரன் தலையின் மேல் நிற்கும் அந்தரி. நீல நிறம் உடையவள்
என்றும் அழிவற்ற கன்னிகை. வேதனாகிய பிரமனுடைய கபாலத்தைத் தாங்கிய திருக்
கரத்தை உடையவள் ஆகிய அபிராமியின் தாமரை மலரைப் போன்ற திருவடிகள்
என் உள்ளத்துள்ளே என்றும் எழுந்தருளியிருப்பனவாம்

தாயே. எம் தந்தையாராகிய சிவபெருமானது திருவுள்ளத்தில் இருப்பனவும். திரு
விழிகளில் உள்ளனவும். அழகு பெற்ற பொன்மலையாகிய மேருவைப் போலப் பருத்தி
ருப்பனவும். அழுத திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்குப் பால் வழங்கினவும்.
ஆகிய பெரிய திருவருள் மிகுந்த அழகிய திருத்தனபாரமும், அவற்றின் மேல் உள்ள
முத்துமாலையும். சிவந்த திருக்கரத்திலுள்ள கரும்பு வில்லும் மலரம்புகளும்,
(முருத்தன) மயிலிறகின் அடிக்குருத்துப் போன்ற புன்னகையும். தேவியாகிய நின்
பூரணத் திருக்கோலமும் என் முன் நின்று காட்சி அருளுக.

எழுதாமல் கேட்கப்படுகின்ற வேதத்தில் பொருந்தும் அரிய பொருளாக உள்ளவளே,
அருளே வடிவாக உள்ளவளே, உமாதேவியே, அன்று இமாசலத்தில் பார்வதியாகத்
திருவவதாரம் செய்தவளே, அழியாத மோட்ச ஆனந்தமாக உள்ளவளே; அடியேன்,
நின்றபடியும், இருந்தபடியும், படுத்தபடியும், நடந்தபடியும் தியானம் செய்வது
உன்னையே; என்றைக்கும் வழிபடுவது உன் திருவடித் தாமரையையே-

ஆனந்த உருவமே தானாகி. என் அறிவாகி. நிரம்பிய அமுதம் போன்றவளாகி, ஆகாசம்
முதல் ஐம்பெரும்பூதங்களும் தன் வடிவாகப் பெற்ற தேவியினுடைய நான்கு வேதங்
களுக்கும் முடிவாக நிற்கும் திருவடித்தாமரையானது, வெண்ணிறத்தையுடைய மயானத்தை
தம்முடைய ஆடும் இடமாக உடைய எம்பெருமாகிய சிவபிரானது திருமுடி மாலையாக
உள்ளது. (கண்ணி: தலையில் அணியும் அடையாள மாலை)

(என் அம்மே....) என் தாயே. ஏழுலங்களையும் படைத்த பெருமாட்டியே, அடியேன் எப்போதும்
தியானம் செய்வது உன்னுடைய பெரும் புகழை: பலகாலும் பயின்று உணர்வுடன் ஓதுவது

நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன் செய்த
புண்ணியம் ஏது? என் அம்மே, புவி ஏழையும் பூத்தவளே.

(13) பூத்தவளே, புவனம் பதினான்கையும், பூத்த வண்ணம்
காத்தவளே. பின் கரந்தவளே. கறைக் கண்டனுக்கு
மூத்தவளே. என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே,
மாத்தவளே. உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

(14) வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்;
சிந்திப்பவர் நற்றிசை முகர் நாரணர்; சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்; பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே.

(15) தண் அளிக்கு என்று முன்னே பல கோடி தவங்கள் செய்வார்
மண் அளிக்கும் செல்வமோ பெறுவார், மதி வானவர் தம்
விண் அளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடும் அன்றோ
பண் அளிக்கும் சொற பரிமள யாமளைப் பைங்கிளியே.

ஹம்ஸாநந்தி

(16) கிளியே. கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே. ஒளிரும் ஒளிக்கு இடமே. எண்ணில் ஒன்றும் இல்லா

(4)

உன் திருநாமத்தை; உள்ளம் உருகிப் பக்தி பண்ணுவது உன் இரண்டு திருவடித் தாமரை
களில்; பகலும் இரவுமாகச் சென்று சேர்வது, உன்னை விரும்பிய அன்பர்களின்
கூட்டத்தை; இவ்வளவுக்கும் காரணமாக அடியேன் முற்பிறவியிற் செய்த புண்ணி
யச் செயல் யாது?
உலகம் பதினான்கையும் திருவருளால் ஈன்ற பெருமாட்டியே; அருள் கொண்டு ஈன்று
போலவே, அவற்றைப் பாதுகாத்த தாயே; பின்பு அப்புவனங்களை மறைத்து வைத்து
(சங்காரம் செய்யும்) அம்மையே; விடக் கறுப்பை திருக்கழுத்திலே உடைய சிவபெரு
மானுக்கு முன்பு தோன்றிய தத்துவமாக உள்ளவளே; மூப்பை அடையாத திருமா
லுக்குத் தங்கையே. பெரிய தவத்தை உடையவளே; அடியேன் உன்னையே தெய்வ
மாக வழிபடுவதை அல்லாமல் வேறு ஒரு தெய்வத்தை வழிபடுவது முறை ஆகுமா?
(சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுதலின் மூத்தவள் என்றார்)
எம்பெருமாட்டியே! உன்னை வணங்குபவர்கள் தேவர்களும் அசுரர்களும் ஆகிய இருவகையின
ருமாவார்; உன்னைத் தியானிப்பவர்கள் நல்லவர்களாகிய பிரமதேவரும் திருமாலும்;
தம்முடைய திருவுள்ளத்துக்குள் அன்பினாலே கட்டி இன்புறுகிறவர் அழியாத
பரமானந்த சொரூபியாகிய சிவபெருமான்; ஆயினும் உன் குளிர்ந்த திருவருள் மண்ணில்
உன்னைத் தரிசிப்பவர்களுக்கு எளிதாக இருக்கிறது. (இது என்ன வியப்பு)
(பண் அளிக்கும் .....) பண்களைப் போல இனிமையைத் தரும் திருவாய் மொழியையும், திவ்ய
மணத்தையும் கொண்ட சியாமளா தேவியாகிய பச்சைக்கிளி போன்ற தாயே, உன்னுடைய
குளிர்ந்த கருணையைப் பெறும் பொருட்டு முற்பிறவிகளில் பல கோடி தவங்களைச் செய்த
வர்கள், இந்த உலகத்தைக் காத்து ஆளும் செல்வமாகிய அரசுரிமையை மட்டுமா பெறுவார்
கள்? அறிவுடைய தேவர்களுக்கு உரிய தேவலோகத்தை ஆளும் செல்வமாகிய இந்திர
பதவியையும், என்றும் அழியாத மோட்சமாகிய வீட்டையுமன்றோ பெறுவார்கள்.
கிளி போன்ற திருமேனியை உடைய தேவியே, உன் உறவினராகிய அன்பர்கள் மன
நிலைபெற்று ஒரு காலுக்கு ஒரு கால் விளங்கித் தோன்றும் ஞான ஒளியே; விளங்கு

வெளியே, வெளி முதல் பூதங்கள் ஆகி, விரிந்த அம்மே,
அடியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.

(17) அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி, துணை இரதிபதி
சயமானது அபசயமாக முன் பார்த்தவர் தம் மதி
சயம் ஆக அன்றோ வாம பாகத்தை வவ்வியதே.

(18) வவ்விய பாகத்து இறைவரும் நீயும், மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகி வந்து
வெவ்விய காலன் என் மேல் வரும் போது வெளிநிற்கவே.

(19) வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்து என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை; கருத்தினுள்ளே,
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது; என்ன திருவுள்ளமோ;
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

(20) உறைகின்ற நின் திருக்கோயில் நின் கேள்வர் ஒரு பக்கமோ,
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ, கஞ்சமோ எந்தன் நெஞ்சகமோ,
மறைகின்ற வாரிதியோ, பூரணாசல மங்கலையே.



ஒளிகளுக்கெல்லாம் ஆதாரப் பொருளே; எண்ணிப்பார்க்கும்போது, எந்தத் தத்துவமும் ஆகாமல் எல்லாம் கடந்து நின்ற பரவெளியே; ஆகாசம் முதலிய ஐம்பெரும் பூதங்களுமாக விரிந்த தாயே; இத்துணைப் பெரிய பொருளாகிய நீ, இரங்கத்தக்க அடியேனது சிற்றறிவின் எல்லைக்கு உட்பட்டது வியப்புத் தருவதாகும்.

வியக்கத்தக்க திருவுருவத்தை உடையவள்; தாமரைகளெல்லாம் துதிக்கும் வெற்றியுடைய திருமுகத்தையுடைய அழகுக் கொடி போன்றவள்; துணைவியாகிய இரதியின் கணவனாகிய மன்மதன் பிற இடங்களில் பெற்ற வெற்றியெல்லாம் தோல்வியாகும்படியாக, முன்பு நெற்றிக் கண்ணால் பார்த்தவருடைய திருவுள்ளம் தனக்குரிய வெற்றியாக மாற, அதனால் அல்லவோ, அவருடைய இடப்பாகத்தை கவர்ந்து கொண்டது?

தாயே! நீ பற்றிக் கொண்ட வாமபாகத்தையுடைய சிவபெருமானும் நீயும் ஒன்றி மகிழ்ந்திருக்கும் நிலையில் உள்ள கோலமும், உங்கள் திருமணக்காட்சியைக் காட்டும் கோலமும், என் உள்ளத்திலே இருந்த அகந்தையைப் போக்கி ஆண்டு கொண்ட பொலிவு பெற்ற திருவடியுமாகி, நீ எழுந்தருளி வந்து, கொடுமையான காலன் உயிரைக் கொள்ள என்னை நோக்கி வரும்போது, என் முன் வெளிப்படையாகத் தரிசனம் தந்து நின்றருள்தீர்

ஒளிநிலையாக நிற்கும் நவகோண சக்கரத்தை விரும்பி அதில் தங்கும் அபிராமியே; [களாக] புறத்திலே யாவரும் காண எழுந்தருளிய நின்னுடைய அழகிய திருக்கோலத்தைப் புறத்தும் அகத்தும் தரிசித்து, அதனால் அடியேனுடைய கண்களிலும் நெஞ்சிலும் நிலைத்து நின்ற ஆனந்த வெள்ளத்துக்குக் கரை காண முடியவில்லை; அடியேன் உள்ளத்தில் தெளிந்து நின்ற மெய்ஞ்ஞானம் விளங்குகின்றது; இன்னும் என்ன என்ன அனுபவத்தை வழங்கவேண்டுமென்பது உன்னுடைய திருவுள்ளமோ!

(பூரண அசல...) எங்கும் நிறைந்தவளாயும், தளர்ச்சியற்றவளாயும், நிறைந்த மங்கலம் உடையவளாயும் உள்ள அபிராமி அன்னையே! நீ எழுந்தருளியிருக்கின்ற நின்னுடைய அழகிய கோயில், நின் பதியாகிய சிவபிரானுடைய ஒரு பக்கமாகிய வாமபாகமோ? உன் புகழைச் சொல்லுகின்ற நான்கு வேதங்களின் மூலமாகிய பிரணவமோ?

Scanned by CamScanner

6

அவற்றின் முடிவாகிய உபநிஷத்துக்களோ? அமுதம் நிறைந்திருக்கும் வெண்மையான சந்திரனோ? தாமரை மலரோ? அடியேனுடைய நெஞ்சாகிய இடமோ? தன்பால் விழும் எல்லாப் பொருள்களும் மறைவதற்கு இடமாகிய கடலோ?

## தர்பாரி கானடா

(21) மங்கலை, செங்கலசம் முலையாள், மலையாள், வருணச்
சங்கு அலை செங்கைச், சகல கலா மயில், தாவு கங்கை
பொங்கு அலை தங்கும் புரிசடையோன் புடை ஆள் உடையாள்
பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள், பசும் பெண் கொடியே.

நித்திய மங்கலையாகிய அபிராமி தேவி. சிவந்த கலசத்தைப் போன்ற தனபாரங்களை உடையவள்; மலைமகள்; நிறம் பெற்ற சங்காலாகிய வளைகள் அசைகின்ற சிவந்த திருக்கரங்களையுடைய, எல்லாக் கலைகளுக்கும் தலைவியாகிய மயில் போன்றவள்; பாய்கின்ற கங்கையின் மேலெழும் அலைகள் அடங்கித் தங்குதற்குரிய முறுக்கிய சடையையுடைய சிவபிரானது வாமபாகத்தை ஆட்கொண்டவள்; பொன்னிறம் படைத்த பிங்கலை; நீல வண்ணம் படைத்தவள் (காளி); செந்நிறம் பெற்ற லலிதாம்பிகை; வெண்ணிறம் பெற்ற வித்தியாதேவி; பச்சை நிறம் பெற்ற உமாதேவி.

(22) கொடியே. இளவஞ்சிக் கொம்பே. எனக்கு வம்பே பழுத்த
படியே. மறையின் பரிமளமே. பனி மால் இமயப்
பிடியே, பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே.
அடியேன் இறந்து, இங்கு இனிப் பிறவாமல் வந்து ஆண்டு கொள்ளே.

........: கொடி போன்றவளே, இளைய வஞ்சிமரத்திலுள்ள பூங்கொம்பு போன்றவளே எனக்குப் பக்குவம் இல்லாவிட்டாலும், அதனை எண்ணாமல், காலம் அல்லாத காலத்தில் பழுத்த இன்பக் கனியின் திருவுருவமே, வேதமென்னும் மலரில் பரவிய மணம் போல இருப்பவளே பனியையுடைய பெரிய இமயமலையில் உலாவிய பெண்யானை போன்றவளே. பிரமன் முதலாய தேவர்களைப் பெற்ற தாயே, அடியேன் இப்போது இறந்து, பின்னர் மீண்டும் பிறவாமல் இருக்கும்படி, நீயே எழுந்தருளி வந்து அடியேனை ஆட்கொள்ள வேண்டும்

(23) கொள்ளேன் மனத்தில் நின் கோலம் அல்லாது, அன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன்; பர சமயம் விரும்பேன், வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே, உள்ளத்தே விளைந்த
கள்ளே, களிக்கும் களியே. அளிய என் கண்மணியே.

(வியன்...) விரிந்த மூன்று உலகங்களுக்கும் உள்ளே உள்ள பொருளே: ஆயினும் எல்லா உலகங்களுக்கும் அப்பால் உள்ள பொருளே: அடியார்கள் உள்ளத்தே முற்றி விளைந்த இன்பமாகிய கள்ளே; அதனால் ஆனந்த வெறி கொண்டு மகிழும் மகிழ்ச்சியே; இரங்கத் தக்க என் கண்ணுள் மணி போன்றவளே; அடியேன் நின்னுடைய திருவுருவத்தையல்லாமல் வேறு எதையும் என் மனத்தில் தியானப் பொருளாகக் கொள்ள மாட்டேன்; நின் அன்பர்களின் கூட்டத்தை என்றும் பிரியேன்: பரசமயங்களை விரும்பேன்.

(24) மணியே. மணியின் ஒளியே. ஒளிரும் மணி புனைந்த
அணியே. அணியும் அணிக்கு அழகே. அனுகாதவர்க்குப்

மாணிக்கத்தைப் போன்றவளே: மணியில் கலந்த ஒளி போன்றவளே, பிரகாசிக்கும் மணிகளால் புனையப் பெற்ற ஆபரணம் போன்றவளே, அணியும் அணிகளுக்கு அழகாக விளங்குபவளே.

Scanned by CamScanner

பிணியே. பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்த பின்னே

(25) பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன். முதல் மூவருக்கும்
அன்னே. உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே.
என்னே இனி? உன்னை யான் மறவாமல் நின்று ஏத்துவனே.

மோகனம்

(26) ஏத்தும் அடியவர், ஈரேழுலகினையும், படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம்; கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே, மணம் நாறும் நின் தாள் இணைக்கே, என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

(27) உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை; பத்ம பத யுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருட் புனலால்
துடைத்தனை; சுந்தரி, நின் அருள் ஏதென்று சொல்லுவதே.

(7)

உன்னை அனுசரிப்பணியாதவர்களுக்குப் பிணி போன்றவளே: பிறவி என்னும் நோய்க்கு மருந்தாக இலங்குபவளே; அமரர்களுக்குப் பெருவிருந்தாக இருந்து வாழ்வு தருபவளே; நின்னுடைய தாமரையைப் போன்ற திருவடியைப் பணிந்த பிறகு வேறு ஒருவரையும் வணங்க மாட்டேன்.

(முதல் மூவருக்கும்...) முதற் கடவுளராகிய திரிமூர்த்திகளுக்கும் தாயே: உலகிலுள்ள உயிர்களை பிறவிப்பிணியினின்றும் நீங்க. அபிராமி என்னும் நாமத்தோடு எழுந்தருளியிருக்கும் அரிய மருந்து போன்றவளே; உன்னை யான் என்றும் மறவாமல் நிலையாக நின்று துதிப்பேன்; (என்னே இனி) இனி எனக்கு என்ன கவலை? (இப்பேறு கிடைத்ததற்குக் காரணம் என்ன?) நின் அடியார்களின் பின்னே அவர்களுக்கு ஆளாகத் திரிந்து (போற்றி வழிபட்டு) பிறவிப் பிணியை அறுக்கும் பொருட்டு. முற்பிறவிகளில் தவங்களை செய்திருக்கிறேன்.

(கமழ்...) மணம் வீசும் கடம்பமலரை அணியும் கூந்தலையுடைய தெய்வப் பெண்ணே (தேவியே) உன்னைத் துதிக்கும் அடியவர்கள் பதினான்கு உலகங்களையும் படைத்தும், காத்தும், அழித்தும் திரிபவர்களாகிய மும்மூர்த்திகள்; அப்படி இருக்க மணம் வீசுகின்ற நின்னுடைய (இணை) இரண்டு திருவடிகளுக்கு, தனக்கும் பற்றாத அடியேனுடைய நாவில் தங்கிய பொலிவற்ற மொழிகளும் (துதிகளாக ஏற்றுக்கொள்ளப் பெற்று). ஏற்றம் பெற்றது நகைக்கத் தக்கதாக இருக்கிறது.

(சுந்தரி) பேரழகியே, வஞ்சனையுடன் கூடிய இப்பிறவி என்னும் தளையினைத் தகர்த்து விட்டாய்; (அதற்கு முன்) அடியேனுடைய உள்ளம் உருகுவதற்குக் காரணமான சிறந்த அன்பை அடியேன் பெறும்படி செய்தாய்; (அதற்கு முன்) நின்னுடைய தாமரை மலரைப் போன்ற (யுகம்) இரண்டு திருவடிகளை எளியேன் தலையில் அணிந்து வழிபடும் வேலையையே எனக்கு நியமித்தாய்; அதற்கு முன் ஏழையேனுடைய நெஞ்சிலுள்ள பல வகையான அழுக்குகள் யாவற்றையும் தூயதண்ணீரால் துடைத்து விட்டாய்: இங்ஙனம் செய்த நின் திருவருளை எத்தகையதென்று சொல்வது!

Scanned by CamScanner

(28) சொல்லும் பொருளும் என நடம் ஆடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே. அழியா அரசும்
செல்லும் தவ நெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

(29) சித்தியும், சித்தி தரும் தெய்வம் ஆகித் திகழும். பரா
சத்தியும். சத்தி தழைக்கும் சிவமும், தவம் முயல்வார்
முத்தியும். முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்து எழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

(30) அன்றே தடுத்து என்னை ஆண்டு கொண்டாய்; கொண்டது அல்ல என்கை
நன்றே உனக்கு: இனி நான் என் செயினும். நடுக் கடலுள்
சென்றே விழினும். கரை ஏற்றுகை நின் திருவுள்ளமே.
ஒன்றே. பல உருவே. அருவே. என் உமையவளே!

பந்து வராளி

(31) உமையும், உமை ஒருபாகனும் ஏக உருவில் வந்து, இங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்: இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை; ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை:
அமையும், அமையுறு தோளியார் மேல் வைத்த ஆசையுமே.

(8)
சொல்லும் பொருளும் போல ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜப் பெருமானுடன்
இணைந்திருக்கும், (ஞான) மணம் வீசும் மலர்க்கொடி போன்ற அன்னையே, அப்பொழுது
மலர்ந்த தாமரை மலரைப் போன்ற நின்னுடைய திருவடியை. இரவும் பகலும் தொழு
கின்ற அடியவர்களுக்கு. பகைவர்களால் அழிவு வராத அரசச் செல்வமும், பயனடை
யும் வரையில் செல்லும் தவநெறி வாழ்வும். இறுதியில் மோட்சமாகிய சிவலோக
பதவியும் கிடைக்கும்.

அஷ்டமாசித்திகளும், அச்சித்திகளை வழங்கும் தெய்வமாகி விளங்குகின்ற பராசக்தியு
சக்தியைத் தம்மிடத்தே தழைக்கச் செய்த பரமசிவமும். தவம் புரிவார் அடையும்
முக்தியின்பமும். அந்த முக்தியைப் பெறுவதற்கு மூலமும். மூலமாகித் தோன்றி எழுந்த
அறிவும் (ஞானமும்) ஆகிய எல்லாமாக இருப்பவள். அறிவினுள்ளே நின்று பாதுகாக்கும்
திரிபுரசுந்தரியே. (புரம் - புரத்தை; புரம்: அம்பிகைக்குரிய திரிபுரங்கள்)

ஒருருவாக உள்ளவளே, பல உருவங்களை உடையாய். உருவம் ஏதும் அற்ற அருவே.
எனக்குத் தாயாகிய உமா தேவியே; முன் ஒரு நாள் அடியேனைத் தடுத்தாட் கொண்டரு
ளினை: அவ்வாறு ஆட்கொண்டதை அல்ல என்று மறுத்தல் உனக்கு நியாயமா?
இனிமேல், அடியேன் என்ன பிழை செய்தாலும், கடலுக்கு நடுவே சென்று விழுந்தாலும்
என் குற்றத்தை மறந்து கரையேற்றிப் பாதுகாத்தலே நின் திருவுளப்பாங்குக்கு
ஏற்ற செயலாகும்.

உமையும், அத்தேவியை ஒருபாகத்தில் கொண்ட பரமசிவனும், ஒரே உருவத்தில் வந்து
பரிசுத்தமற்ற எம்மையும். தம்மிடம் அன்பு செய்யும்படியாக வலியத் தடுத்தாட்
கொண்டருளினார்கள்; இனிமேல், நாம் கடைப்பிடிப்போமென்று எண்ணி ஆராய்வதற்
குரிய வேறு சமயங்களும் இல்லை; பிறவிப்பிணி நீங்கியதாதலின், இனி எம்மை
பெற்று எடுப்பதற்குரியவளாகிய தாயும் இல்லை: (அமையுறு) மூங்கில் போன்ற
தோளையுடைய பெண்களின் மேல் வைத்த ஆசையும். (அமையும்) இனிப் போது

(32) ஆசைக் கடலில் அகப்பட்டு, அருள்அற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லற் பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலிய வைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்! ஈசர் பாகத்து நேரிழையே.

(33) இழைக்கும் வினை வழியே அடும் காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய், அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே.
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடி வந்தே.

(34) வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான் உலகம்
தந்தே, பரிவோடு தான் போய் இருக்கும் சதுர்முகமும்.
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும், பாகமும், பொற்
செந்தேன் மலரும், அலங்கதிர் ஞாயிறும் திங்களுமே.

(35) திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி சென்னி வைக்க
எங்கட்கு ஒரு தவம் எய்தியவா; எண் இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்
வெங்கட் பணிஅணை மேல் துயில் கூரும் விழுப்பொருளே.



சிவபெருமானுடைய வாமபாகத்தில் எழுந்தருளியிருக்கும் (நேரிழையே) நுட்பமான அணிகலன்களை அணிந்துள்ள தாயே, ஆசையென்னும் கடலில் அகப்பட்டு, அதன் விளைவாக இரக்கமற்ற யமனது கைப்பாசத்தில் அகப்பட்டு துன்புறும்படி இருந்த அடியேனை, நின் திருவடியாகிய நறுமணம் வீசும் தாமரை மலரை, அடியேன் தலைமீது நீயாக விரும்பி வலிய வைத்து, என்னைத் தடுத்தாண்டு கொண்ட பெரும் கருணையை எவ்வாறு உரைப்பேன்

(அத்தர் ...) இறைவருடைய திருவுள்ளம் முழுதும் உருகும்படி செய்யும், கலவைச் சந்தனம் பூசிய குவிந்த தனபாரங்களை உடைய யாமளையாகிய மெல்லியலே, எல்லாவற்றையும் வரையறுக்கும் (வினை) விதியின்படி கொல்ல வரும் காலன் என்னை நடுங்கச் செய்து அழைக்கும் போது, நீ எழுந்தருளி "நீ பயப்படாதே" என்று கூறி காத்தருள வேண்டும்; நான் (உழைக்கும்) வருந்தும் போது, உன்னையே நாடி ஓடி வந்து 'அன்னையே சரணம்' என்று புகலடைவேன்.

அபிராமியன்னை, தன்னிடம் வந்து புகலடையும் அடியவர்களுக்குச் சொர்க்கலோக பதவியை அன்போடு தந்து, தான், பிரமதேவனுடைய நான்கு முகங்களிலும், பசிய தேன் ஒழுகும் துழாய் மாலையும், பருத்த கவுஸ்துப மணியும் அணிந்த திருமாலின் திருமார்பிலும், சிவபெருமானுடைய வாமபாகத்திலும், செந்தேன் சொரியும் பொலிவு பெற்ற தாமரை மலரிலும், பரவிய கிரணங்களையுடைய கதிரவனிடத்திலும், சந்திரனிடத்திலும் போய் வீற்றிருப்பாள்.

(தரங்கக் ...) அலை வீசும் பாற்கடலில் வெவ்விய கண்ணையுடைய ஆதிசேஷனாகிய பாம்புப் பாயலின் மீது துயிலும் மேலான பொருளே! சிவபெருமானது திருமுடியில் உள்ள (சந்திரனது பிளவு) பிறைச் சந்திரனது மணம் வீசும் நின்னுடைய சிறிய அடியை எங்கள் சிரத்திலே நீ வைத்தருள, எங்களுக்கு ஒப்பற்ற தவம் கிடைத்தவாறு என்ன வியப்பு! கணக்கில்லாத பல தேவர்களுக்கும் இத்தகைய சிறந்த தவம் கிடைக்குமோ? கிடைக்காது.

Scanned by CamScanner

<u>காம்போதி</u>

(36) பொருளே. பொருள்முடிக்கும் போகமே, அரும் போகம் செய்யும் மருளே, மருளில் வரும் தெருளே. என் மனத்து வஞ்சத்து இருள் ஏதும் இன்றி ஒளி வெளி ஆகி இருக்கும் உன்றன் அருள் ஏது. அறிகின்றிலேன். அம்புயாதனத்து அம்பிகையே.

(37) கைக்கே அணிவது கன்னலும் பூவும், கமலம் அன்ன மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை. விட அரவின் பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும், எட்டுத் திக்கே அணியும் திரு உடையானிடம் சேர்பவளே.

(38) பவளக் கொடியிற் பழுத்த செவ் வாயும் பனிமுறுவல் தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத் துவளப் பொருது துடி இடை சாய்க்கும் துணைமுலையாள் அவளைப் பணிமின் கண்டீர், அமராவதி ஆளுகைக்கே.

(39) ஆளுகைக்கு உன்றன் அடித்தாமரைகள் உண்டு: அந்தகன் பால் மீளுகைக்கு உன்றன் விழியின் கடை உண்டு; மேல் இவற்றின் மூளுகைக்கு என் குறை; நின் குறையே அன்று : முப்புரங்கள் மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள் நுதலே



பலவகைச் செல்வமாக உள்ளவனே. அச்செல்வத்தால் நிறைவேறும் போகமே. அரிய போகங்களைத் துய்க்கும்படி செய்யும் மாயாரூபியே. அம்மயக்கத்தின் முடிவில் உண்டாகும் தெளிந்த ஞானமே. (அம்புயாதனத்து ....) தாமரையாகிய இருக்கையில் எழுந்தருளிய அம்பிகையே; அடியேனது மனத்தில் மாயையிருள் சிறிதும் இல்லாமல் நீங்கச், சுடர் வீசும் பெருவெளியாக (பராகாசமாக) இருக்கும் நின் திருவருள் எத்தகையதென்று அடியேன் அறியவில்லை-அறிய இயலவில்லை.

எட்டுத்திக்குகளையே தான் அணியும் அழகிய ஆடையாகக் கொண்ட இறைவனுடைய இடப்பாகத்தைச் சேர்ந்து எழுந்தருளியிருக்கும் அன்னை. தன் கையில் அணிந்து கொண்டிருப்பவை கரும்பு வில்லும் மலர் அம்புகளும் : செந்தாமரை போன்ற திருமேனியில் அணிந்திருப்பது தூய வெள்ளையான முத்துமாலை; நச்சையுடைய பாம்பின் படம் போன்ற குறிய ஸ்தானத்தில் அணிவது பல மணிக் கோவைகளாலான மேகலையும் பட்டும் ஆகும்.

(அமராவதி...) இந்திர பதவியைப் பெற்றுத் தேவலோக ராசதானியாகிய அமராவதியை ஆளவேண்டுமெனின், அதன் பொருட்டு. பவளக்கொடி போலக் கனிந்த சிவந்த வாயும். குளிர்ந்த புன்னகையோடு கூடிய வெண்மையான அழகிய பல் வரிசையும் தமக்குத் துணையாக இருக்க, எங்கள் கடவுளாகிய சங்கரனைக் குழைந்து நெகிழும்படியாக மோதி உடுக்கை போன்ற இடையைத் தளரச் செய்யும் இரண்டு தனங்களை உடையவளாகிய அபிராமியை வழிபடுவீர்களாக.

திரிபுரங்களும் அழிவதற்காகத் திருமாலாகிய அம்பைத் தொடுத்த, மேருமலையாகிய வில்லையுடைய, சிவபெருமானது வாம பாகத்தில் எழுந்தருளியிருக்கும், ஒளிபடர்ந்த நெற்றியையுடைய அபிராமி அம்மையே! அடியேனை ஆட்கொள்ளுவதற்கு நின் திருவடித் தாமரை மலர்கள் இருக்கின்றன; காலனிடம் செல்லாமல் மீண்டும் உய்வதற்கு உதவியாக நின் கடைக்கண் பார்வை இருக்கிறது; (இவற்றின் மேல்) இவற்றின் தொடர்பு பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருப்பது என்குறைதான்; நின் திருவருட் குறையே அன்று.

(40) வாள் நுதற் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்து இறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம் பெருமாட்டியைப், பேதை நெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக், காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ, முன் செய் புண்ணியமே.

ஒளி பொருந்திய நெற்றியில் (ஞானத்) திருவிழியுடையவளை, தேவர்கள் யாவரும் தேடி வந்து பணிந்து விரும்பி வழிபடுவதற்கு எண்ணிய எம் தலைவியை, அறியாமையையுடைய மனத்தில் காணுவதற்கு நெருங்கியவள் அல்லாத கன்னியை, தரிசிக்கும் அன்பு அடைவதற்கு எண்ணிய எண்ணம், முற்பிறவியில் நாம் செய்த புண்ணியச் செயலின் பயனன்றோ?

தன்யாஸி

(41) புண்ணியம் செய்தனமே, மனமே. புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி, நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து. தம் அடியார்கள் நடு இருக்கப்
பண்ணி நம் சென்னியின் மேற் பத்ம பாதம் பதித்திடவே.

மனமே, அன்று அலர்ந்த புதிய குவளை மலரைப் போன்ற திருவிழிகளையுடைய அபிராமியும், அப்பிராட்டியின் செந்நிறத்தையுடைய பதியும் சேர்ந்து, நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால், நாம் இருக்கும் இடத்தை அணுகி வந்து, நம்மைத் தம் அடியார்களிடையே இருக்கும்படி திருவருள் பாலித்து, நம்முடைய தலையின் மேலே, தம் திருவடித் தாமரைகளைப் பதிப்பதற்கு உரிய புண்ணியச் செயல்களை முற்பிறவியில் செய்திருக்கிறோம்; என்ன வியப்பு!

(42) இடம் கொண்டு விம்மி, இணை கொண்டு இறுகி, இளகி, முத்து
வடம் கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை
நடம் கொண்ட கொள்கை நலம் கொண்ட நாயகி: நல் அரவின்
படம் கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே.

பரந்த இடத்தைக் கொண்டு, பருத்து, ஒன்றோடு ஒன்று ஒக்க வளர்ந்து, தளர்ச்சியின்றிச் செறிந்து, மெத்தெனக் குழைந்து, முத்து மாலையை அணியாகக் கொண்ட தனம் என்னும் மலையைக் கொண்டு, சிவபெருமானது வன்மை பெற்ற நெஞ்சைத் தான் நினைத்தவாறு எல்லாம் ஆட்டி வைக்கும் (கொள்கை) விரதத்தையும், அதற்கு ஏற்ற அழகையும் உடைய தேவி. நல்ல பாம்பின் படத்தை ஒத்த நிதம்பத்தையும், குளிர்ச்சியையுடைய திரு வார்த்தைகளையும், வேதமாகிய சிலம்பையும் உடையவள்.

(43) பரிபுரச் சீறடி பாசாங்குசை, பஞ்ச பாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர மேனியள், தீமை நெஞ்சில்
புரி, புர வஞ்சரை, அஞ்சக் குனி பொருப்புச் சிலைக்கை,
எரி புரை மேனி, இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

சிலம்பை அணிந்த சிறிய திருவடிகளையும், பாசாங்குசத்தையும் உடையவள்; ஐந்து மலர்ப் பாணங்களை தரித்தவள்; இனிய சொல்லையுடைய திரிபுர சுந்தரி; சிந்தூரம் போலச் சிவந்த திருமேனியை உடையவள்; உலகுக்குத் தீமை செய்ய வேண்டும் என்று நெஞ்சினில் (புரி) நினைந்து, அவ்வாறு செய்த (புர) திரிபுரத்தில் உள்ள வஞ்சகர்களாகிய அசுரர்கள் அஞ்சுவிக்க (குனி) வளைத்த மேருமலையாகிய வில்லைத் திருக்கரத்தில் பெற்றவரும், நெருப்பை ஒத்த திருமேனியை உடையவருமாகிய சிவபெருமானது சரி பாதியில் எழுந்தருளி இருந்தவள் ஆகும்.

(44) தவளே இவள். எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே அவர் தமக்கு அன்னையும் ஆயினள். ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனி ஒரு தெய்வம் உண்டாக மெய்த் தொண்டு செய்தே.

(45) தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே, பின் வெறுக்கை அன்றே.

நாயகி

(46) வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியது அன்றே, புது நஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே.

(47) வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன்; மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று; விள்ளும்படி அன்று; வேலை நிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல், இரவு பகல்



(12) (இவள்) என் நெஞ்சிற்கு அணிமையான தியானப் பொருளாக உள்ள இவ்வம்பிகை (தவளே) இறைவரை மணக்க வேண்டுமென்று தவம் செய்த உமாதேவியே; எங்கள் பிரானாகிய சங்கரனுடைய மனை வாழ்வுக்கு மங்கலமாக விளங்கும் இப்பெருமாட்டியே அவருக்கு ஒரு திறத்தில் அன்னையும் ஆனாள்; ஆகையினால் இவளே தேவர் யாவருக்கும் மேலான தலைவி ஆவாள்; இவளைத் தெய்வமாகக் கொண்டு தொண்டு செய்வதையன்றி, வேறு ஒரு தெய்வம் உண்டென்பதாக எண்ணி, மெய் வருத்தித் தொழும்பு செய்து அதனால் தளர்ச்சியை அடையேன்.

தேவி. நின் திருவடிக்குத் தொண்டு செய்யாமலும். நின் பாதத்தை வணங்காமலும், உண்மையான பொருள் இன்னதென்று உறுதியாகத் தெளிந்து, தம் மனம் விரும்பியவற்றையே செய்தவர்கள் பழங்காலத்தில் இருந்தனரோ, இல்லையோ? இருந்தனர் ஆதலின், அத்தகைய மெய்ஞ்ஞானியராகிய அடியார்களைப் போலவே, அடியேனும் என் இச்சைக்குரிய செயல்களைச் செய்தால், அது வஞ்சகமாகுமோ? அப்படியின்றி அவர்களுடைய செய்கைகள் எல்லாம் தவமாவது போல என் செய்கைகளும் தவமாகுமா? அடியேன் மாறுபாடான செயல்களைச் செய்தாலும் என்னைப் பொறுப்பது நன்மையாகும்; என்னை வெறுத்துப் புறக்கணித்தல் நன்று அன்று.

புதிய ஆலகால விடத்தை உண்டு கறுத்த திருக்கழுத்தை உடைய சிவபிரானது வாமபாகத்தில் பொருந்திய பொன்னிற மேனிப் பெருமாட்டியே! நாம் வெறுப்பதற்குரிய இயல்பினவாகிய செயல்களைத் தம் அடியவர்கள் செய்தாலும், அவர்களை அறிவினால் மிக்க பெரியோர்கள் பொறுத்தருளும் இயல்பு, இவ்வுலகத்தில் இன்று நேற்று வந்த புதிய பழக்கம் அன்றே; ஆதலால் நீ ஏற்றுக் கொள்ளாது விலக்கும் இயல்புடைய செயல்களை அடியேன் செய்தாலும் (அவற்றை நீ பொறுத்தருள்வாய் என்ற தைரியத்தால் மீட்டும்) நின்னை வாழ்த்தித் துதிப்பேன்.

அழிவற்ற இன்ப வாழ்வு வாழும்படியாக (ஒன்று) ஒரு பரம்பொருளைத் திருவருளால் பெற்ற ஞானத்தைக் கொண்டு, அறிந்து கொண்டேன்; அது மனத்தில் ஒருவர் விரும்பித் தியானிக்குமாறு உள்ளதன்று; வாயினால் இப்படி உள்ளதென்று உரைப்பதற்கும்

தழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

(48) சுடரும் கலைமதி துன்றும் சடை முடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போதிருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

(49) குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங் கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது, வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழ வந்து அஞ்சல் என்பாய்.
நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகியே.

(50) நாயகி. நான்முகி. நாராயணி. கை நளின பஞ்ச
சாயகி. சாம்பவி, சங்கரி, சாமளை, சாதி நச்சு
வாய். அகி மாலினி, வாராகி, சூலினி. மாதங்கி என்று
ஆய கியாதி உடையாள். சரணம். அரண் நமக்கே.

சரங்கா

(51) அரணம் பொருள் என்று அருள் ஒன்று இலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என, நின்ற நாயகி தன் அடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.





உரியதன்று; கடல் ஏழும். உலகு ஏழும். பெரிய மலைகள் எட்டும் அணுகாமல் இரவையும் பகலையும் முறையே செய்யும் சுடர்களாகிய சந்திர சூரியர்களுக்கு நடுவே அமைந்து ஒளி வீசுகின்றது

பிரகாசிக்கும் கலைகளையுடைய, பிறை பொருந்திய சடையோடு கூடிய, திருமுடி யையுடைய மேருமலை போன்ற சிவபெருமானை இணைந்து படர்கின்ற மண முள்ள பசுங்கொடியாகிய அபிராமவல்லியைத் தம்முடைய நெஞ்சில் பதித்து தியானம் செய்து. அதனால் துன்பம் நீங்கி, இமைக்கும் கணப்போதேனும் பர மணந்த அநுபூதி நிலையில் இருப்பவர்கள், மீட்டும், குடலும். நிணமும். இரத்தமு சேர்ந்த குடிசையாகிய உடம்பில் வந்து அடைவார்களா? (அடையார்)

யாழ் நரம்பைப் பொருந்திய. இசையின் வடிவாக நின்ற ஈசுவரியே! இந்த உடம் கிய குடிசையைச் சார்ந்து, குடியாகப் புகுந்த உயிரானது, கொடுமையான கூற்றுவனுக்கு, விதியால் வகுக்கப்பட்ட கால எல்லையை அணுகி வருந்தும்; அந்த சமயத்தில், நின்னுடைய வளைகளை அணிந்த கைகளை அமைத்து அபய முத்திரை காட்டி, அரம்பையும், அவளோடு அடுத்து வரும் பிற தேவமகளிரும் உன்னைச் சூழ் வர, நீ எழுந்தருளி. அஞ்சாதே என்று கூறி பாதுகாத்தருள வேண்டும்.

எல்லாவற்றுக்கும் தலைவி. நான்கு முகங்களை உடையவள், நாராயணி. கைத்தா மின் ஐந்து மலரம்புகளைத் தரித்தவள், சம்புவின் மனைவி. சங்கரி. சாமளை. ந வாயிலே உடைய நல்ல சாதிப் (அகி) பாம்பை மாலையாக உடையவள். வா சூலினி. மாதங்கி என்று பல படியாகக் கூறும் திருநாமங்களால் ஆகிய புகழ் உடையவளாகிய அபிராமியின் திருவடிகள் நமக்குப் பாதுகாப்பாம்.

திரிபுரமதில்களே உண்மையான செல்வமென்று எண்ணிய, இரக்கம் சிறிதும் இ மூன்று அசுரர்களுடைய வலிமையும். அன்று ஒரு நாள் அழிந்து போகும்படி கோபி னகிய சிவபெருமானும், திருமாலுமே (சரணம் சரணம் என) நின் திருவடியே எமக் புகல் என்று கூற, (நின்ற நாயகி தன்) அவர்களுக்கு அருள் புரிந்து கொண்டு நி

Scanned by CamScanner

(52) வையம், துரகம், மதகரி, மா மகுடம், சிவிகை,
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறை முடித்த
ஐயன் திருமனையாள், அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

(53) சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்ய பட்டும்
பென்னம் பெரிய முலையும் முத்தாரமும், பிச்சி மொய்த்த
கன்னங் கரிய குழலும் கண்மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவம் இல்லையே.

(54) இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடு தவம்
கல்லாமை கற்ற கயவர் தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

(55) மின் ஆயிரம் ஒரு மெய் வடிவு ஆகி விளங்குகின்ற
அன்னாள், அகம் மகிழ் ஆனந்த வல்லி, அருமறைக்கு
முன்னாய் நடு எங்குமாய் முடிவாய முதல்வி தன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே.



எழுந்தருளியிருக்கும் தலைவியாகிய அபிராமியின் அடியார்கள் இறப்பு, பிறப்பு என்னும் இரண்டையும் இவ்வுலகத்தில் அடையார்கள்.

தேர், குதிரை, மதம் மிக்க யானை, பெரிய கிரீடம், பல்லக்கு, பிற மன்னர்கள் கப்பம் கட்டும் பொன், மிக்க விலையையுடைய பொன்னாரம், முத்து மாலை என்பன, பிறையைத் திருமுடிக்கண் சூடிய சிவபெருமானுடைய, அழகிய பத்தினியாகிய அபிராமியின் திருவடித் தாமரைக்கு முற்பிறவிகளில் அன்பு செய்த தவமுடைய அடியார்களுக்கு உண்டாகிய அடையாளங்களாம்.

தேவியானவள் மிகச் சிறிய தன் திரு இடையிலே சாத்திய சிவந்த பட்டாடையையும் மிகப் பெரிய தகிலையும், அங்கே அணிந்த முத்து மாலையையும், பிச்சிமலர் நெருங்கிய மிகக் கரிய கூந்தலையும், மூன்று கண்களையும் தம் உள்ளத்திலே தியானித்துத் தனித்திருந்து யோகம் பயில்வாருக்கு, இவ்வாறு தியானிக்கும் செயலையன்றி வேறு பயனுடைய தவம் ஒன்றும் இல்லை.

மக்களே, ஒரு செல்வரிடத்தில் போய் உங்களுடைய வறுமை நிலையைச் சொல்லி அவரால் அவமானப்பட்டு நில்லாத நிலை வேண்டுமென்று நெஞ்சில் கருதுவீர்களானால், தினந்தோறும் உயர்ந்த தவத்தைப் பயிலாமையைக் கற்ற இழிகுணத்தவரிடம் ஒரு பொழுதும் செல்லாத நிலையை என்பால் வைத்தருளிய திரிபுரசுந்தரியின் திருவடிகளைப் புகலாக அடைவீர்களாக.

ஆயிரம் மின்னல்கள் ஒரு திருமேனியின் உருவெடுத்து விளங்குவது போன்ற கோலத்தை உடையவளும், அடியவர்கள் உள்ளத்தில் துய்க்கும் ஆனந்தமயமான கொடி போன்றவளும், அரிய வேதத்திற்கு முதலான பிரணவமாய், நடுவிலே எங்குமாகிப் பரவியிருக்கும் சாகைகளாய், முடிவாக உள்ள உபநிடதங்களாய் இருக்கும் முதற் பொருளாகிய அபிராமியை, மக்கள் நினையாதொழிந்தாலும், நினைத்தாலும் (தியானித்தாலும்) அவருக்கு அவர்களால் வேண்டப்படுவது - கிடைக்க வேண்டுவது, ஆக வேண்டுவது - ஒன்றும் இ

<u>காபி</u>

(56) ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய
நின்றாள்; அனைத்தையும் நீங்கி நிற்பாள். என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா. இப்பொருள் அறிவார்
அன்று ஆல் இலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

(57) ஐயன் அளந்தபடி இரு நாழி கொண்டு அண்டம் எல்லாம்
உய்ய அறம் செய்யும் உன்னையும் போற்றி, ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று, பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்றன் மெய் அருளே.

(58) அருணம்புயத்தும், என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணம்புய முலைத் தையல் நல்லாள், தகை சேர் நயனக்
கருணம்புயமும் வதனம்புயமும் கராம்புயமும்
சரணம்புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே

(59) தஞ்சம் பிறிது இல்லை. ஈது அல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன்; ஒற்றை நீள் சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலர் ஆக நின்றாய்: அறியார் எனினும்
பஞ்சு அஞ்சும் மெல் அடியார், அடியார், பெற்ற பாலரையே.



ஒரு பொருளாகிய பராசக்தியாய் நுட்பமான அரும்பு போல இருந்து, பின்பு பல்
வேறு சக்திகளாக விரிந்து. இந்த உலகெங்கும் அந்தர்யாமியாய் நின்றாள்;
ஆயினும் யாவற்றையும் கடந்தும் நிற்பாள்; அத்தகைய அம்பிகை என்னுடைய
நெஞ்சுக்குள்ளே, மறையாமல் (நீங்காமல்) நிலை பெற்று நின்று. விரும்பி. அருள்
புரிவது என்ன ஆச்சரியம்! இக்கருத்தை (உண்மையை) அறிபவர்கள், பிரளய கால
மாகிய அன்று ஆல் இலையில் யோகத்துயில் கொண்ட பெருமானாகிய திருமாலும்
என் தந்தையாகிய சிவபெருமானுமே ஆவர்.

பரமேசுவரனாகிய என் தந்தை அளந்து தந்த வண்ணம், இரண்டு படி நெல்லைக் கொண்டு
உலகிலுள்ள உயிர்களெல்லாம் வாழும்படி தர்மம் செய்கின்ற உன்னையும் பாக்களால்
புகழ்ந்து, வேறு ஒருவரிடத்தில் செம்மையான பசிய தமிழ்ப்பாமாலையைப் பாடி
அதையும் கொண்டு போய் அவரைப் பற்றிய பண்புகளைப் பொய்யும் மெய்யுமாகப்
பாட வைத்தாயே! இதுவோ உன் உண்மையான திருவருள்?

செந்தாமரை மலரிலும். என் உள்ளத்தாமரையிலும் எழுந்தருளியிருக்கும். தாமரை
அரும்பு போன்ற தனங்களையுடைய பாலாம்பிகையின், (தகை) அழகு சேர்ந்த கருணை
விழியாகிய தாமரையும், திருமுகத் தாமரையும், திருக்கரங்களாகிய தாமரைகளும்
திருவடிகளாகிய <u>தாமரைகளும்</u> அல்லாமல் வேறு ஒரு புகலிடத்தையும்
அடியேன் கண்டதில்லை.

நீண்ட தனி வில்லும், ஐந்து அம்புகளும் முறையே கரும்பாகவும், மலராகவும்
கைக்கொண்டு நின்ற தேவி, இது அல்லாமல் வேறு பற்றுக்கோடு இல்லையென்று
உணர்ந்து, நின்னை வழிபட்டுத் தியானிக்கும் தவ வழியில் என் மனத்தைப்
பழகும்படி செய்ய அடியேன் எண்ணவில்லை; பஞ்சை மிதிப்பதற்கும் அஞ்சுகின்ற
மென்மையான பாதங்களை உடைய தாய்மார்கள், தாம் பெற்ற பிள்ளைகள்
(அறியார் எனினும்) அறியாமையை உடையவர்களாக இருந்தாலும், (அடியார்)
அவர்களைத் தண்டிக்க மாட்டார்கள். (அதுபோல் நீயும், என்னை தண்டியாமல்
அருள் புரிய வேண்டும்)

(60) பாலினும் சொல் இனியாய், பனிமா மலர்ப் பாதம் வைக்க
மாலினும், தேவர் வணங்க நின்றோன், கொன்றை வார் சடையின்
மேலினும், கீழ் நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும், சால நன்றோ அடியேன் முடை நாய்த் தலையே.

பாலைக் காட்டிலும் இனிய சொல்லை உடையாய். குளிர்ச்சியையுடைய அழகிய தாமரை மலர் போன்ற நின் திருவடிகளை வைத்தருள, திருமாலும், மற்றும் உள்ள தேவர்களும் வணங்கும்படி நின்ற சிவபெருமானது கொன்றைக் கண்ணியை அணிந்த நீண்ட சடையின் மேலிடத்தைக் காட்டிலும், கீழே நின்று கொண்டு வேதங்கள் பாடுகின்ற உண்மையான பிரணவ பீடங்கள் நான்கைக் காட்டிலும் அடியேனுடைய நாற்றமுடைய நாய்த் தலையைப் போன்ற தலையானது மிகவும் நன்றோ?
(ஸ்தூல பி.பீடம்: சூட்சும பி.பீ; காரண பி.பீ; மகா காரண பி.பீ)

ஆஹிரி

(61) நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய், நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய்; என்ன பேறு பெற்றேன்!
தாயே, மலைமகளே, செங்கண்மால் திருத் தங்கைச்சியே!

தாயே, மலையரசனாகிய இமவான் புத்திரி ஆகிய பார்வதி தேவியே, சிவந்த கண்ணையுடைய திருமாலின் அழகிய தங்கையே, நாய் போன்ற என்னையும் நின் அருளுக்குரிய பொருளாகத் திருவுள்ளம் கொண்டு, விரும்பி நீயே இங்கே வலிய வந்து, (நினைவின்றி) இவனை ஆட்கொள்ளலாமா கூடாதா என்ற நினைவும், ஆட்கொள்வதற்குரிய தகுதி இன்னது என்ற நினைவும், நாம் இன்ன உயர் நிலையில் இருக்கிறோம் என்ற நினைவும் இல்லாமல் அடியேனை அடிமை கொண்டாய்: நீ இருந்த இயல்பைப் பேய் போன்ற அடியேன் அறியும் அறிவை அருளினாய்; அடியேன் எத்தகைய பாக்கியத்தை அடைந்தேன்!

(62) தங்கச் சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கட் கரி உரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி, கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே.

மேருமலையாகிய பொன்வில்லைக் கொண்டு அசுரர்களுடைய திரிபுரத்தை அழித்து, மதம் பொருந்திய கொடுமையையுடைய யானையின் தோலை உரித்துப் போர்த்த செவ்விய வீரனாகிய சிவபெருமான் திருமேனி முழுவதிலும் தன்னுடைய நகிலாகிய குரும்பை அடையாளத்தை வைத்த பிராணேசுவரியினுடைய தாமரை மலரைப் போன்ற சிவந்த கையிலுள்ள கரும்பு வில்லும், மலர் அம்புகளும் எக்காலத்திலும் என் மனத்திற்குள்ளே இருப்பனவாகும்.

(63) தேறும்படி சில ஏதுவும் காட்டி முன் செல் கதிக்குக்
கூறும் பொருள், குன்றில் கொட்டும் தறி குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்

பெரியோர்கள், வைதிக சமயங்கள் என்று குறிப்பிடும் சமயங்கள் ஆறுக்கும் அதிதேவதை, அபிராமியாகிய இவளாக இருப்பதை அறிந்திருந்தும், வேறு சமயமும் உண்டு என்று அதனைப் பாராட்டிய வீணர்களுக்கு (தேறும்படி) அவர்கள்

Scanned by CamScanner

வேறும் சமயம் உண்டு என்று கொண்டாடிய வீணருக்கே.

(64) வீணே பலிகவர் தெய்வங்கள் பால் சென்று மிக்க அன்பு பூணேன்; உனக்கே அன்பு பூண்டு கொண்டேன்; நின் புகழ்ச்சி அன்றிப் பேணேன், ஒரு பொழுதும், திருமேனி ப்ரகாசம் அன்றிக் காணேன், இரு நிலமும் திசை நான்கும் ககனமுமே.

(65) ககனமும் வானும் புவனமும் காண விற் காமன் அங்கம் தகனம் முன் செய்த தவப் பெருமாற்குத் தடக்கையும் செம் முகனும் முந்நான்கு இருமூன்று எனத் தோன்றிய மூதறிவின் மகனும் உண்டாயது அன்றோ, வல்லி, நீ செய்த வல்லபமே.

ஞானம்

(66) வல்லபம் ஒன்று அறியேன் சிறியேன்; நின் மலர் அடிச் செம் பல்லவம் அல்லது பற்று ஒன்று இலேன், பசும் பொற் பொருப்பு வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்; வினையேன் தொடுத்த சொல் அவம் ஆயினும் நின் திருநாமங்கள் தோத்திரமே.

(67) தோத்திரம் செய்து தொழுது, மின் போலும் நின் தோற்றம், ஒரு மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர், வண்மை குலம்



உண்மையைத் தெரிந்து கொள்ளும்படி சில பிரமாணங்களைக் காட்டி, அவர்களை மேலே செல்லும் நற்கதிக்கு உபகாரமாக அறிவுறுத்தப்படும் பொருள்கள், குன்றின் மேல் அடிக்கும் மரத்தாலான ஆப்புக்களைப் போன்றவை. (அவை உள்ளே இறங்காதது போல, அறிவுரைகள் பயனின்றி ஒழியும்)

தாயே, வீணை, உயிர்ப்பலியை ஏற்றுக் கொள்ளும் சிறு தெய்வங்களிடம் போய் மிக்க பக்தியைக் கொள்ள மாட்டேன்; நினக்கே அன்பை மேற்கொண்டேன்; நின் புகழை அல்லாமல் வேறு ஒருவர் புகழிலும் விருப்பம் கொள்ளேன்; பெரிய பூமியிலும், நான்கு திசைகளிலும், வானத்திலும், ஒரு காலத்திலும், நின் திருமேனியின் ஒளியை யன்றி வேறு ஒன்றையும் காணேன்.

(வல்லி) அபிராமவல்லியே, முன் ஒரு காலத்தில், மேலுள்ள உலகங்களும், தேவலோகமும், இந்தப் பூவுலகமும் காணும்படியாக, வில்லொடு போர வந்த மன்மதனுடைய உடம்பை எரித்த தவமுனிவராகிய சிவபெருமானுக்கு, விசாலமான திருக்கரங்களும், செம்மையான முகங்களும் முறையே பன்னிரண்டும், ஆறும் என்று அமைய அவதரித்த முதிர்ந்த ஞானத்தையுடைய முருகனாகிய குமாரனும் உண்டானது அல்லவா, நீ செய்த (வல்லபம்) ஆற்றலுள்ள செயல்.

பசும்பொன் மலையாகிய மேருவை வில்லாகப் பிடித்த சிவபெருமானுடன் கவலையின்றி எழுந்தருளியிருக்கும் தேவி, எந்த வகையான ஆற்றலையும் அடியேன் அறிய மாட்டேன், சிற்றறிவும் சிறிய ஆற்றலும் உடைய யான் எங்கும் வியாபித்த நின் திருவடியாகிய செம்மையாகிய தளிரையல்லாமல் வேறு ஒரு பற்றும் இல்லாதவன்; தீவினையையுடைய யான் அந்தாதியாகத் தொடுத்த சொற்கள் பொருளில்லாத வீண் சொற்களாயினும், இடையிடையே வைத்த நின் திருநாமங்கள் தோத்திரமே ஆகும். (ஆதலின் இதனாலும் பயன் உண்டு)

தேவி, நின்னை வாயால் துதி செய்து, கையால் தொழுது, மின்னலைப் போல சுடர் விடும் நின் திருமேனித் தோற்றத்தை ஒரு கணப்போதாவது மனத்தில் இருத்தித்

கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தோறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலா நிற்பர் பார் எங்குமே.

(68) பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர் விசும்பும்
ஊரும் முருகு சுவை ஒளி ஊறு ஒலி ஒன்று படச்
சேரும் தலைவி சிவகாமசுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத தனம் இல்லையே.

(69) தனம் தரும், கல்வி தரும், ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே
கனம் தரும், பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

(70) கண் களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில்
பண் களிக்கும் குரல் வீணையும் கையும், பயோதரமும்,
மண் களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே.

<u>யமுனா கல்யாணி</u>

(71) அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள், பனிமா மதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பு இருக்க
இழவு உற்று நின்ற நெஞ்சே! இரங்கேல்; உனக்கு என் குறையே.



தியானம் செய்யாதவர். கொடைத் தன்மை. குடிப் பிறப்பு. கோத்திரம், கல்வி நல்ல குணம் முதலியவற்றில் குறைபாடு உடையவராகி, உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் பிச்சைப் பாத்திரத்தை கையில் ஏந்திக் கொண்டு குடிசை தோறும் பிச்சைக்காகத் திரிவார்கள்.

வேகமாக வீசுகின்ற வாயுவும், எங்கும் பரந்திருக்
பிருதிவியும், அப்புவும், அக்கினியும், மணம். சுவை. ஒளி. பரிசம். ஒலி என்னும்
கும் ஆகாசமும் தம்மிடத்தில் பரவி இருக்கும்
ஐந்து தன் மாத்திரைகளோடு ஒன்றுபடும்படியாக அவற்றினிடத்தே வியாபித்து நிற்கும் பரமேசுவரியாகிய சிவகாமசுந்தரியின் சிறிய திருவடிகளைச் சாரும் தவம் உடைய அடியார்கள் தமக்கு உரியனவாகப் பெறாத செல்வம் ஏதும் இல்லை

பூவை அணிந்த குழலையுடைய அபிராமி அன்னையின் கடைக்கண்களின் பார்வை, அன்பர் என்பவர்களுக்கே, செல்வத்தைத் தரும், கல்வியை அளிக்கும். ஒரு நாளும் தளர்வை அறியாத உறுதியான மனத்தை அளிக்கும், தெய்வீக அழகை வழங்கும், மனத்தில் வஞ்சகம் இல்லாத நல்லவர்களின் கூட்டத்தைத் தரும். நல்லனவாகிய எல்லாவற்றையுமே வழங்கும். எல்லா மேன்மைகளையும் உண்டாக்கும். (கனம் தரும்) (அல்லது)
(கனம் தரும் : மேகத்தைப் போன்ற பூங்குழலாள்)

கடம்ப வனத்தில், பல வகைப் பண்களால் களிப்பை விளைவிக்கும் குரலோடு ஒன்றிய வீணையும், திருக்கரங்களும், திருத்தனமும், உலகத்தோர் தரிசித்து மகிழும் பச்சை நிறமும் ஆக எழுந்தருளி, யாழ்ப்பாணராகிய மதங்கர் குலத்தில் உதித்த பெண்களில் ஒருத்தியாகத் திருவவதாரம் செய்த எம்பெருமாட்டியாகிய சியாமளாதேவியின் அளவிடற்கரிய பேரழகை அடியேன் விழிகள் மகிழும்படி தரிசனம் செய்தேன்.

எதையோ இழந்து விட்டது போல வருந்தி, (ஒரு செயலும் செய்ய மாட்டாமல்) நின்ற என் நெஞ்சமே! தன் திருமேனி அழகுக்கு வேறு ஒருவரும் ஒப்பே இல்லாத கொடி போன்ற அபிராமி, அரிய வேதங்களில் பயிலுவதனால் (சஞ்சரிப்பதால்) சிவந்த திருவடித் தாமரைகளை உடையவள்; குளிர்ச்சியை உடைய அழகிய பிறையைச் சூடும் திருமுடியை

(72) என்குறை தீர நின்று ஏத்துகின்றேன்; இனியான் பிறக்கின்
நின் குறையே அன்றி யார் குறை காண்? இருநீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்,
தன் குறை தீர எம் கோன் சடை மேல் வைத்த தாமரையே.

(73) தாமம் கடம்பு, படை பஞ்ச பாணம், தனுக் கரும்பு,
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது, எமக்கு என்று வைத்த
சேமம் திருவடி, செங்கைகள் நான்கு, ஒளி செம்மை, அம்மை
நாமம் திரிபுரை, ஒன்றோடு இரண்டு நயனங்களே.

(74) நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர், பாவையர் ஆடவும் பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

(75) தங்குவர் கற்பகத் தருவின் நீழலில், தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை, மால் வரையும்



உடைய மெல்லியலாகிய யாமளா என்னும் பூங்கொப்பு நமக்கு வேண்டியவற்றை யெல்லாம் அருளிக் காப்பாற்ற இருக்கும் போது, நீ வருந்தாதே; உனக்கு என்ன குறை இருக்கிறது.

அகன்ற உயர்ந்த வானத்தில் உள்ள மின்னலுக்கு ஒரு குறையைக் காட்டி அதனினும் மெலிந்து நின்ற, நுட்பமான இடையையுடைய மெல்லியலே! எம்முடைய பிரானாகிய சிவபெருமான், தன்னுடைய குறை தீரும் பொருட்டுத் தன் சடை முடியின்மேல் வைத்த நின் திருவடித் தாமரைகளை, அடியேனுடைய குறை தீரும் பொருட்டு, தளராமல் நின்று துதித்து வழிபடுகிறேன் (அதனால் நான் இனி பிறக்க மாட்டேன்). ஒருகால் அடியேன் இனிமேல் பிறந்தால், அது நின் குற்றமே; அல்லாமல் வேறு யார் குற்றம்?

அபிராமி அம்மையின் மாலை கடம்பு; ஆயுதம் ஐந்து மலரம்புகள்; வில் கரும்பு; அவளுடைய மந்திர சாதகர்களாகிய வயிரவர்கள் அவளை வழிபடும் நேரம், நடு யாமமாகிய நள்ளிரவு; எம்மை ஆட்கொள்ளும் பொருட்டு வைத்துள்ள பாதுகாப்பு அவள் திருவடி; அவள் செம்மையான திருக்கரங்கள் நான்கு; அவள் திருமேனியின் ஒளி சிவப்பு; அவளுடைய திருநாமம் திரிபுரை; அவள் திருவிழிகள் ஒன்றோடு இரண்டாகிய மூன்று.

மூன்று திருவிழிகளுடைய சிவபெருமானும், வேதங்களும், திருமாலும், பிரமனும் புகழ்ந்து பாராட்டும் அபிராமவல்லியின் இரண்டு திருவடிகளையே பிறவிப்பயன்/ முக்தியாகிய பயனென்று கொண்டு வழிபட்டுத் தியானிக்கும் அடியவர்கள், அரம்பை மகளிர் நடனம் புரியவும், இன்னிசைப் பாடல்களைப் பாடவும், அவற்றைக் கண்டும் கேட்டும் இன்புற்று, பொன்னிறம் பெற்ற படுக்கையில் அவர்களோடு பொருந்தி இன்புறும் கற்பகச் சோலையிலே இந்திராதி வீற்றிருப்பார்களா?

அட்டகுலாசலங்களையும், மேலே இருக்கும் உப்புக் கடல் முதலிய ஏழு கடல்களையும் பதினான்கு புவனங்களையும் பெற்றெடுத்த திருவயிற்றையும், மணம் பரவியதும்

பொங்கு உவா ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்த உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

## பைரவி

(76) குறித்தேன் மனத்தில் நின் கோலம் எல்லாம் நின்குறிப்பு அறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி; வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப்பிரான், ஒரு கூற்றை மெய்யில்
பறித்தே குடி புகுதும் பஞ்ச பாண பயிரவியே.

(77) பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர் சண்டி, காளி, ஒளிரும் கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வாராகி என்றே
செயிர் அவி நான்மறை சேர் திருநாமங்கள் செப்புவரே.

(78) செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக்குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என் துணை விழிக்கே.

(79) விழிக்கே அருள் உண்டு அபிராமவல்லிக்கு, வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்



(20) மலரை அணிந்ததுமாகிய கூந்தலையும் உடைய அபிராமியன்னையின் அழகிய
திருவுருவத்தைத் தியானம் செய்யும் அடியார்கள், இந்திர பதவி பெற்றுக்
கற்பக மரத்தின் நிழலில் வீற்றிருப்பர்; பின்பு பூமியில் பிறந்து இறந்து தப்பாமல்
வருகின்ற பிறவியைத், தம்மைப் பெறும் தாய்மார் இல்லாமையாலே, மங்கச் செய்வர்.

வண்டுகள் கோதியதனால் மணம் பொருந்திய தேன் கட்ட விழ்ந்து ஒழுகுகின்ற
கொன்றை மலரை அணிந்த சடாபாரத்தை உடைய சிவபெருமானுடைய திரு
மேனியில் ஒரு பாதியை வலியக் கவர்ந்து, அங்கே குடி புகுந்த, ஐந்து மலரம்புகள்
உடைய பயிரவியே, அடியேன் மனத்தில் நின் திருக் கோலம் முழுவதும் தியானம்
செய்தேன்; அதன் பயனாக நின் திருவுள்ளக் குறிப்பை அறிந்து, யமன் என் உயிரைப்
பறிக்க வருகிற நுணுகிய வழியை அடைத்து விட்டேன்.

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சகர் உயிரை பலியாகக் கொள்ளும்
உயர்ந்த பெருமையை உடைய சண்டிகாதேவி, காளி, ஒளி வீசும் கலைகளை வயிர மாலை
யாகப் பூண்ட வீரத்தையுடைய வயிரவி, சூரிய சந்திர மண்டலங்களில் வீற்றிருக்கும்
மண்டலி, அட்சர மாலையை அணிந்த மாலினி, சூலி, வாராகி என்று (செயிர் அவி)
குற்றங்களையெல்லாம் போக்கும், நான்மறைகளைச் சார்ந்த, தேவியின் திருநாமங்களை
ஆன்றோர்கள் கூறுவர் - (சொல்லிப் பயன் பெறுவர்)

தந்தத்தால் கடைந்த செப்பையும், தங்கத்தாலான கலசத்தையும் போன்ற அழகிய
தனங்களின் மேல் அப்பிய கலவைச் சந்தனத்தையுடைய அபிராமவல்லி காதில்
அணிந்த முத்துக் கொப்பையும், வயிரக் குழையையும், செழுமையான கருணைமிகு
கடைக்கண்களையும், பவளம் போன்ற இதழ்களையும், அவற்றினிடையே மலர்ந்த
நிலவு போன்ற புன்னகையையும் என் இரண்டு கண்களிலும் எழுதிப் பதிய வைத்தேன்.

அபிராமவல்லிக்குத் திருவிழியால் எமக்கு வழங்கும் திருவருள் இருக்கிறது. அவ்வருளை
அடையும் பொருட்டு வேதம் சொன்ன நெறியில் அவளை வழிபட எமக்குத் துணையாக
நெஞ்சு இருக்கிறது: அந்த நல்ல வழி இருக்கவும், பழிச் செயல்களிலே உழன்று

குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே ?

(80) கூட்டியவா என்னைத் தன் அடியாரில்! கொடிய வினை
ஓட்டியவா! என் கண் ஓடியவா! தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!
ஆட்டியவா நடம்! ஆடகத் தாமரை ஆரணங்கே.

துாகா

(81) அணங்கே, அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை, வாழ்த்துகிலேன், நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன், எனது உனது என்று இருப்பார் சிலர், யாவரொடும்
பிணங்கேன், அறிவு ஒன்று இலேன். என்கண் நீ வைத்த பேர் அளியே.

(82) அளி ஆர் கமலத்தில் ஆரணங்கே, அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர் திரு மேனியை உன்னுந் தோறும்
களியாகி, அந்தக் கரணங்கள் விம்மிக் கரை புரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே.

(83) விரவும் புது மலர் இட்டு நின் பாத விரைக் கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்,
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே.

திரிந்து, கொடிய பாவச் செயல்களையே செய்து அதன் பயனைப் பாழான நரகக் குழியிலே அழுந்த இருக்கும் இழிந்தவர்களோடு இப்போது எமக்கு என்ன உறவு இருக்கிறது ?

பொற்றாமரையில் எழுந்தருளியிருக்கும் அரிய அழகியாகிய தேவி, சிறிதும் தகுதியில்லாத என்னைத் தன் அடியாருள் ஒருவனைச் சேர்த்தருளியவாறும், அவ்வாறு சேர்த்துப் பின் என்னிடமிருந்த கொடிய கன்மங்களைப் போக்கியவாறும், அருள் புரிய என்னிடம் ஓடி வந்தவாறும், தன் திருக்கோலத்தை உள்ளபடியே காட்டியவாறும், அதனைத் தரிசித்து அறிந்த என் கண்ணும் மனமும் ஆனந்த மேலீட்டால் மகிழ்கின்றவாறும், என்னை ஆனந்த நடனம் ஆட்டுவித்தவாறும் என்ன அதிசயம்!

தேவி, வெவ்வேறு சக்திகளாம் தேவ மாதர்கள், நின் பரிவார சக்திகளாக இருத்தலினால் உன்னையன்றி வேறு ஒருவரை நான் வணங்கேன்; வாழ்த்துதலும் செய்யேன்; நெஞ்சில் வஞ்சகத்தையுடைய மக்களோடு சேர மாட்டேன்; 'எனது எல்லாம் நின்னுடையதே' என்று எல்லாவற்றையும் நினக்கே அர்ப்பணம் செய்து விட்டு நிச்சலனமாக இருக்கும் யோகியார் சிலர்; அவர் யாவரோடும் மாறுபடாமல் உறவு பூண்டிருப்பேன்: அறிவு சிறிதும் இல்லையெனினும் என்பால் நீ வைத்த பெரிய கருணை இருந்தவாறு என்னே! (அதுவே இத்தனைக்கும் காரணம்).

வண்டுகள் மொய்க்கும் தாமரை மலரில் எழுந்தருளிய தேவியே, சகல அண்டங்களும் நின் ஒளியாகப் பரவி நிற்கக் காரணமான பிரகாசிக்கும் அழகிய நின்றன் திருமேனியைத் தியானிக்குந் தோறும், என் அந்தக் கரணங்கள் ஆனந்த மயமாகிப் பூரித்துக் கால தேச தத்துவ எல்லைகளெல்லாம் கடந்து பரவெளியாகிவிடுமானால், நீ அருள் செய்த இந்த அதிசய உபாயத்தை - திருவருளின் திறனை - எவ்வாறு அடியேன் மறப்பேன்.

பல வகை வண்ணமும் வடிவும் மணமும் உடைய புதிய மலர்களை அர்ச்சனை செய்து நின்னுடைய திருவடியாகிய மணத்தையுடைய தாமரைகளை, இரவும் பகலும் வணங்கும் வன்மையையுடைய அடியவர்கள், தேவர்கள் யாவரும் புகழும் பதவியையும், அயிராவதத்தையும், ஆகாய கங்கையையும், வலிமையையும், வஜ்ராயுதத்தையும், கற்பகச் சோலையையும் உடைய இந்திரராக ஆவார்கள்.

Scanned by CamScanner

(92) பதத்தே உருகி நின் பாதத்திலே மனம் பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய்; இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்;
முதல் தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ் நகையே.

(93) நகையே இஃது, இந்த ஞாலம் எல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ் முலை; மானே முது கண்; முடிவு இல், அந்த
வகையே பிறவியும்; வம்பே மலைமகள் என்பது நாம்;
மிகையே இவள் தன் தகைமையை நாடி விரும்புவதே.

(94) விரும்பித் தொழும் அடியார் விழிநீர் மல்கி, மெய் புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தம் ஆகி, அறிவு இழந்து,
சுரும்பிற் களித்து, மொழி தடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும் பித்தர் ஆவர் என்றால் அபிராமி சமயம் நன்றே.

(95) நன்றே வருகினும், தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம்; எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனது என்று அளித்து விட்டேன்; அழியாத குணக்
குன்றே, அருட் கடலே, இமவான் பெற்ற கோமளமே.

(24)

தொழும் அடியவர்களுக்கும் பல வாத்தியங்களும் ஒலித்து ஓசை எழுப்ப, வெள்ளை யானையாகிய ஐராவதத்தின்மேல் ஏறி வரும் இந்திரபதவியை அவள் அருள்வாள்.

முதல் தேவர்களாகிய மும்மூர்த்திகளும், மற்றவர் யாவரும் வணங்கித் துதிக்கும், அரும்பிய புன்னகையையுடைய அபிராமி அன்னையே. நல்ல பக்குவம் பெற்று அந்தப் பக்குவத்தில் என் உள்ளம் உருகி, நின் திருவடியில் பற்றுக் கொண்டு, நின் திருவுள்ளத்துக்கு உவப்பான நெறியிலே ஒழுகும்படி அடியேனை ஆட்கொண்டாய்; ஆதலின் அடியேன் இனிமேல் வேறு ஒருவர் சமயக் கொள்கையைப் பெரிது என்று எண்ணி அறிவு கலங்க மாட்டேன்; அந்தச் சமயத்தினர் ஒழுகும் வழியிலும் போக மாட்டேன்.

இந்த உலகங்களையெல்லாம் ஈன்றருளிய பரமேசுவரிக்கு அரும்பிய நகில் (முகையே) தாமரை அரும்பு; அருளால் நிரம்பி முதிர்ந்த கண், மருட்சியைப் பெற்ற மான் கண்; அவளுக்கு முடிவும் இல்லை; அந்த முறைப்படியே பிறவியும் இல்லை; அவளை மலைக்கு மகள் என்று கூறுவது (வம்பே) வீணே; இங்ஙனம் அவளுடைய இயல்புகளை ஆராய்ந்து பிறகு விரும்புவது என்பது நம் அறிவாற்றலுக்கு மிஞ்சிய செயலாகும். நகைப்பை விளைவிக்கும் செயலேயாகும்.

அம்பிகையை விரும்பி வழிபடும் அடியவர்கள், கண்களில் நீர் மல்க, உடம்பெல்லாம் மயிர்க்கூச்செரிய, பொங்கி வரும் ஆனந்தமயமாக நின்று, ஜீவபோதத்தை இழந்து தேனை உண்ட (சுரும்பின்) வண்டு போல மயங்கி, வார்த்தை குழறி, முன் சொன்னவை யாவும் பொருளுடையனவாகத் தருவதற்குக் காரணமான பித்தை உடையவர் ஆவர் என்றால், அவ்வடியார்களின் வழிபாட்டு நெறியாகிய அபிராமி சமயம் நன்மையை உடையது. (சத்திய சங்கற்பர்கள்)

என்றும் அழியாத குணமலையே, கருணை சமுத்திரமே, இமவான் பெற்ற மெல்லியலே, நன்மையே வந்தாலும், தீமையே விளைந்தாலும் அவற்றை அடியேன் சிறிதும் அறிவதில்லை, எல்லாம் உனக்கே பாரம்; எனக்கு உள்ள உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும், என்னை நீ ஆட்கொண்ட அப்போதே உன்னுடையனவென்று சமர்ப்பித்துவிட்டேன்- இனி எனக்கு ஏது கவலை?

மத்யமாவதி

96 கோமள வல்லியை. அல்லியந்தாமரை கோயில் வைகும்
யாமள வல்லியை. ஏதம் இலாளை. எழுதரிய
சாமள மேனிச் சகல கலா மயில் தன்னைத் தம்மால்
ஆம் அளவும் தொழுவார் எழு பாருக்கும் ஆதிபரே.

97 ஆதித்தன், அம்புலி. அங்கி. குபேரன். அமரர்தம் கோன்,
போதிற் பிரமன், புராரி. முராரி. பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி. காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர். போற்றுவர் தையலையே.

98 தைவந்து நின் அடித்தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும். தலை வந்த ஆறும் கரந்ததெங்கே?
மெய் வந்த நெஞ்சின் அல்லால் ஒரு காலும் விரகர் தங்கள்
பொய் வந்த நெஞ்சில் புகல் அறியா மடப்பூங்குயிலே.

99 குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடைக் கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை: வந்து உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்; கமலத்தின் மீது அன்னமாம்:
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

மெல்லிய கொடி போன்றவளை. அகவிதழையுடைய தாமரையாகிய ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் யாமளாகமத்தில் புகழால் படர்ந்திருக்கும் கொடி போன்றவளை, குற்றம் இல்லாதவளை, ஓவியத்தில் எழுதற்கு அரிய சாமள நிறம் பொருந்திய சகல கலைக்கும் தலைவியாகிய மயில் போன்றவளை, தம்மால் இயன்ற அளவும் உபாசிப்பவர்கள், ஏழுலகங்களுக்கும் அரசர்களாவார்கள்.

சூரியன், சந்திரன், அக்கினி. குபேரன். தேவராஜனாகிய இந்திரன், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன். திரிபுரங்களை அழித்த சிவபெருமான், முரனை அழித்த திருமால், பொதியமலையில் இருக்கும் அகத்தியர். பகைவரை மோதிப் பொருகின்ற வேலையுடைய முருகன். கணபதி, மன்மதன் முதலாகச் சாதனை செய்து நலம் பெற்ற புண்ணியவான்கள் எண்ணில் அடங்காதவர்கள் பராசம்பிகையாகிய அபிராமியை வழிபடுவர்.

உண்மை உணர்வு பொருந்திய அன்பர்களுடைய உள்ளத்தில் அல்லாமல், வஞ்சகர்களுடைய பொய் நிரம்பிய உள்ளத்தில் ஒரு காலும் புகுதலை அறியாத, இளமையையுடைய பூங்குயில் போன்ற தாயே. (ஊடலைத் தணிக்கும் பொருட்டு) நின்னுடைய பாததாமரைகளை (தைவந்து) வருடி, ஊடல் நீங்காமையினால். பிறகு, அந்தப் பாத தாமரைகளை வணங்கித் தலைக்கு அணியாகச் சூடிய சங்கரனுக்கு, அப்போது கையில் இருந்த தீயும். தலையில் இருந்த ஆறாகிய கங்காநதியும் ஒளிந்து கொண்ட இடம் எங்கே?

கைலாசபதியாகிய பரமேசுவரனுக்குப் பழைய காலத்தில் இமவான் திருமணம் செய்து கொடுத்த. கனமான பொற்குழையை அணிந்தவளாகிய அம்பிகை. கடம்ப வனத்தில் குயிலாக வீற்றிருப்பாள்; இமய மலையில் அழகும், நல்லியல்பும் உடைய மயிலாக உலாவிக் கொண்டிருப்பாள்: வானத்தில் வந்து உதயமாகும் கதிரவனை ஒளிபரப்பிக் கொண்டு இருப்பாள்: தியானிப்பாரது உள்ளக் கமலத்தின் மேல் அன்னமாக எழுந்தருளியிருப்பாள்.

(100) குழையைத் தழுவிய கொன்றையந் தார் கமழ் கொங்கை வல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்பு வில்லும்
விழையப் பொரு திறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொரு கண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே.

குழையும்படியாகத் தன்னைத் தழுவிய சிவபெருமானுடைய மார்பில் அணிந்த அழகிய கொன்றை மாலையின் மணம் கமழ்கின்ற தனபாரங்களையுடைய கொடி போன்ற அபிராமியன்னையுடைய, மூங்கிலைப் பொருது வென்ற அழகையுடைய நீண்ட தோள்களும், கரும்பாகிய வில்லும், ஆண்களையும் பெண்களையும் ஒருவரை ஒருவர் விரும்பும்படி தாக்குகின்ற தேனையுடைய அழகிய மலரம்புகளும், வெண்மையான புன்னகையும், மான் கண்ணை ஒத்த கண்களும் என்னுடைய உள்ளத்தில் எந்த நேரத்திலும் தோன்றி வருகின்றன.

பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளை, புவியடங்கக்
காத்தாளை, அங்குச பாசம் குசுமம் கரும்பும் அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.

எவ்வுயிர்க்கும் தாயை, அடியார் கூட்டமாகிய எங்களுக்கு உரிய தெய்வமாகிய அபிராமவல்லியை, உலகங்கள் எல்லாவற்றையும் உண்டாக்கியவளை, மாதுளம் பூவைப் போன்ற சிவந்த நிறம் உடையவளை, உலகம் முழுவதும் பாதுகாத்தவளை, அங்குசம், பாசம், மலரம்புகள், கரும்புவில் ஆகியவற்றை அழகிய கையில் ஏந்தியவளை, மூன்று கண்களை உடையவளை, வழிபடுகிறவர்களுக்கு ஒரு வகையான தீங்கும் இல்லை.

Scanned by CamScanner